# பொதுக்காலம் 30ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே! வணக்கமும் வாழ்த்துகளும்! பொதுக்காலத்தின் 30ஆம் ஞாயிறான இன்று இறைவனின் அழைப்பைப் பற்றி சிந்திக்கத் திருஅவை நம்மை அழைக்கின்றது.

இறைவனின் அழைப்பினை உணர்ந்து, ஏற்றுக் கொண்டு அதற்கேற்ப நாம் வாழும் போது பெற்றுக் கொள்ளும் நலன்களைக் குறித்து எரேமியா இறைவாக்கினர் சுட்டிக் காட்டுகின்றார்.

அழுகையோடு வருபவர்களை ஆறுதலளித்து இறைவன் அணைத்துக் கொள்வார் என்ற இறைவனின் வாக்குறுதியை முன்வைக்கின்றார் எரேமியா. மேலான வரமொன்று கிடைக்கும் போது கீழான ஒன்றை துறந்துதான் ஆக வேண்டும். கடவுள் நம்மிடம் உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டால் பர்த்திமேயு போல, நாம் உடனே பதில் சொல்ல முடியுமா? அத்தகைய இலக்குத் தெளிவு என்னிடம் இருக்கிறதா? வேண்டி என்று சீர்தூக்கிப் பார்க்கும் வரம் இக்கல்வாரிப் பலியில் பங்கேற்போம்.

## முதல் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! அடிமைத்தனத்தில் சிக்கி அல்லலுற்ற இஸ்ரயேல் மக்களை அழைத்த இறைவன் அவர்களை தந்தையைப் போல் பாதுகாத்து, அரவணைத்து வழிநடத்தினார் என்பதைக் கூறும் இறைவாக்கினர் எரேமியா நூலின் வார்த்தைகளை வாசிக்கக் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! பழைய ஏற்பாட்டில் பாவங்களுக்குக் கழுவாயாக விலங்குகள் பலியிடப்பட்டது. புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்குக் கழுவாயாக தன்னையே பலிப்பொருளாகக் கையளித்தார். எனவே இறைவன் அவரை எங்ஙனம் உயர்த்தினார் என எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் வார்த்தைகளை வாசிக்கக் கேட்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. எந்தையே இறைவா! எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் பொதுநிலையினர் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்களின் பணிவாழ்கில் நீர் உடனிருந்து நிறைவாக வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்களை வாழ்விப்பவரே எம் இறைவா! மக்களை ஆள்வதெற்கென்று நியமிக்கப்பட்டுள்ள நாட்டுத் தலைவர்கள் தன்னலம் துறந்து, மக்களின் நலனில் அக்கறை கொண்டு, நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் நல்லுள்ளம் கொண்டவர்களாக வாழ்ந்திட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நலன்களின் நாயகரே இறைவா! எங்களின் வலுவின்மையில்தான் உமது வல்லமை வெளிப்படும் என்பதை நாங்கள் உணர்ந்து, எங்களது குறைகளை ஏற்றுக் கொண்டு அவற்றைக் களைந்து நிறைவுள்ள வாழ்வு வாழ்ந்திட வரம்தர வேண்டுமென்று இறைவா மன்றாடுகிறோம்.

4. எங்களின் ஒளியும் வாழ்வுமான எம் இறைவா! பார்வையற்ற பர்த்திமேயு உமது வருகையை அறிந்து கொண்டு, உம்மிடமிருந்து நலன்களைப் பெற்று கொண்டது போல் நாங்களும் எல்லாச் சூழ்நிலையிலும் உம்மையே முழுமையாய் பற்றிக் கொள்ளும் வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : ஆசிரியை திருமதி. ஞா. சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com